Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 03 19-07-94 செவ்வாய்க்கிழமை ஓசை 151

## வால்வெள்ளியின் துண்டுகள் வெள்ளிக்கிழமை வரை மோதும்

ஷுமேக்கலெவி வால்வெள்ளியின் 21 துண்டுகளும் வெள்ளிக்கிழமை வரை வியாழன் கிரகத்துடன் மோதும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏழாவது துண்டு வியாழனில் இன்று அதிகாலை மோதும் என எதிர்பார்க்கப்பட்டது- முதலாவது மோதலின்போது ஏற்பட்ட தாக்கத்திலும்பார்க்க 25 மடங்கு அதிகரித்த தாக்கத்தை இந்த மோதல் கொண்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினமிரவு மேலும் ஆறு துண்டுகள் வியாழனில் மோதின. தென்னாபிரிக்காவில் தங்கியிருந்த விண்வெளி விஞ்ஞானிகள் நேற்று கருத்து வெளியிடுகையில் இதன் எஞ்சியுள்ள துண்டுகளும் அடுத்த வாரமளவில் வியாழன் கிரகத்துடன் மோதும்போது மிகப் பாரதூரமான தாக்கங்கள் ஏற்படும் (4ம் பக்கம் பார்க்க)

# பொ. ஐ. முன்னணி ஆட்சிக்கு வந்ததும் யுத்தத்தை நிறுத்த உடன் நடவடிக்கை

## கரையோரம் நோக்கி கடற்படை தாக்குதல்

### மீனவரை பிடிக்கவும் முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் பொலிகண்டி பகுதி மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர் கடற்படையினர் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள மீதும் கரையோரக் குடியிருப்புகள் மீதும் தாக்கினர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6-35 மணியளவில் நடைபெற்றது. மீனவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து மீனவர்கள தமது தொழில் உபகரணங்களை விட்டுவிட்டு ஒருவாறு நீந்திக் கரை சேர்ந்தனர். மீனவர்களை பிடிக்க படையினர் முயற்சித்த போதிலும் மீனவர்கள் கடலில் குதித்ததையடுத்து தப்பிக் கொண்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் புக்காரா தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கரைக் குடத்தனைப் பகுதியில் சிறிலங்கா 'புக்காரா' விமானம் மேற்கொண்ட றொக்கட் தாக்குதலுக்கு கரைப் பகுதியில் இருந்த சில கட்டுமரங்கள் சேதமடைந்தன. அத்தோடு அப் பகுதியில் இருந்த ஒரு சட்டடமும் சேதமடைந்தது.

பலாலி இராணுவ முகாமில் இருந்து விரைந்து வந்த புக்காரா விமானம் நேற்றுக் காலை 5.30 மணிக்கு இத் தாக்குதலை மேற்கொண்டது. புக்காரா குண்டு வீச்சு விமானம் தாக்குதலை மேற்கொள்ள முன்னர் ஒரு தடவை வந்து வட்டமிட்டு விட்டு பலாலிக்குச் சென்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மோகலில்

## நாட்டைப் பிரிக்க அனுமதிக்கப் போவதில்லை; சந்திரிகா குமாரணதுங்கா அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சில வாரங்களின் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கும் என்றும், இவ்வாறு ஆட்சி அமைக்கப்பட்டவுடன் வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அவ்வாறு செயற்பட முடியாது போனால் தான் பதவி விலகப் போவதாகவும், சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவியும், மேல்மாகாண முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார். மேலும் அவர், நாடு பிரிவதைத் தான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரசார ஆரம்பக் கூட்டத்தில், நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அங்கு பேசிய சந்திரிகா குமாரணதுங்கா குறிப்பிடுகையில்;

இன்னும் ஒரு சில வாரங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கும் என்றும் அவ்வாறு ஆட்சி அமைக்கப்பட்டதும் வடக்கு-கிழக்கில் நிலவும் யுத்தத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொளவுள்ளதாகவும்.

அவ்வாறு தன்னால் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படின் தான் உடனே அரசியலில் இருந்து ஒதுங்கிவிடப்போவதாகவும் தெரிவித்தார்.

தனது நாட்டின் மீதும் அதன் சகல பிரஜைகளின் மீதும் தான் அன்பு செலுத்துவதாகவும் இதனால் நாட்டை பிளவுபடுத்துவதை ஒருபோதும் தான் அனுமதிக்கப்போவ (4 ஆம் பக்கம் பார்க்க)



## ஆயுதபாணிகள் உள்ளவரை தேர்தல் நடத்தக் கூடாது

### ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

(கொழும்பு)

யாழ். தீவுப்பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கு ஈ பி ...ளார். இந்த ஈ பி. டி. பி. குழுவினரை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## யாழ். தேர்தலை ஆட்சேபித்து

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வாந்திபேதிக்கு சிறுமி பலி

(வடமராட்சி)

வாந்திபேதி நோய்க்கு இலக்காகி ஏழு வயது சிறுமி ஒருவர் பலியானார். பொலிகண்டி மு. வசந்தா என்ற பெண்குழந்தையே இவ்வாறு பலியானவராவார். (யோ)

## கோடீஸ்வரர் சுட்டுக்கொலை

கொழும்பில் பத்துக்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களின் உரிமையாளரான கோடீஸ்வரர் ஒருவர் நேற்று முன்தினம் காலி வீதியிலுள்ள இந்திய தூதரகத்தின் முன்னால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இப்பகுதியில் வைத்து இவர் மீது இனம் தெரியாத நபர்கள் தொடர்ச்சியாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் அதனால் அவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நிராகரிப்பிற்கான காரணம் கூறப்படும்

யாழ், மாவட்ட தேர்தலை ஒத்தி வைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செய்த மனுவை நிராகரித்ததற்கான காரணங்கள் இம் மாதம் 29-ந் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் அறிவித்துள்ளனர்.

மடைந்தது.

# திருமலை மோதலில் படை அதிகாரி பலி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற மோதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து மேலும் தெரிவித்த அவ்வட்டாரங்கள் திருமலை செல்வநகரில் இராணுவ ரோந்துப் பிரிவினர் மறைந்திருந்து வண்டிலில் சென்றுகொண்டிருந்த நான்கு விடுதலைப் புலிகளை தாக்கியதாகவும் இவ்வேளையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு தேர்தல் வேட்பாளர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இனம்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

சென்ற வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இத் துப்பாக்கிச் சூட்டில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த அழகையா என்பவரே கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# தடுத்துவைக்கப்பட்டோர் வாக்களிக்க அனுமதி

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இம்முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது வாக்களிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி தடுப்பு முகாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கு ஈ பி டி: பி. குழுவினர் பெரும் தடைவிதிப்பதாக ஈ. பி. ஆர். எல், எப். குழுவின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசிடம் முறையீடு செய்துள் அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமது குழுவைச் சேர்ந்தவர்கள் தீவுப் பகுதியில் பிரசாரம் செய்வதை ஈ. பி டி. பியினர் தடுப்பதாகவும் இதை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் களையுமாறு கூற

# ஈ. பி. ஆர். எல். எப். புக்கு அருகதையில்லை

1989 தேர்தல்களில் இந்தியப்படையின் துணையுடனும், ஆயுதங்களைத் தாங்கியபடியும் தேர்தலில் பங்கேற்ற ஈ. பி. ஆர். எல். எப். குழுவினர் இப்போது தேர்தலில் ஆயுதங்கள் சம்பந்தப்படக் கூடாது எனக் கூறுவதற்கு அருகதையற்றவர்கள் என ஈ. பி. டி பி. குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ் தீவுப் பகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அங்கு ஈ. பி. டி. பி. ஆயுதக் குழுவினர் தடையாக இருப்பதாக ஈ பி ஆர். எல். எப் குழுவினர் தெரிவித்ததற்கு பதிலளித்தே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

# ஈ. பி. டி. பியின் ஆயுதம் களையப்படமாட்டாது

## ஈ. பி. ஆர். எல். எவ். இற்கு அறிவிப்பு

(கொழும்பு)

தீவுப் பகுதியின் சிவில் நிர்வாகத்தை பொலிசார் பொறுப்பேற்பர் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகள் பற்றிய மாநாடொன்றில் ஈ. பி. ஆர் எல். எவ். பிரதிநிதிகள், தீவுப் பகுதிகளில் தமது வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக கூறியதை அடுத்து, இது தொடர்பாக ஆராயப்பட்ட தனியான உயர்மட்ட மாநாடொன்றிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இம் மாநாட்டில் பாதுகாப்பமைச்சின் செயலாளர், இராணுவ, கடற்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், ஈ பி ஆர். எல் எவ்., ஈ. பி. டி. பி. ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மேற்படி இம் மாநாட்டில், திருமலையிலிருந்து, கப்பல் மூலம் செல்லும் வேட்பாளர்களை ஈ. பி. டி. பி. சோதனையிடக்கூடாது எனவும், கடற்படையினரே சோதனைகளை மேற்கொள்வர்' எனவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவிற்கான நிதி உதவிகளை குறைக்க உதவும் நாடுகள் முடிவு

(கொழும்பு)

தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி விஜேதுங்கா அறிவித்த பல சமூகநல சலுகைத் திட்ட அறிவிப்புகளினால் சிறிலங்காவிற்கான உதவிகளை குறைக்க உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்துள்ளன என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு தேர்தல்கால சலுகை அறிவிப்பை செயற்படுத்த தாம் வழங்கும் அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியை பயன்படுத்தலாம் என உணர்ந்துள்ள உலகவங்கியின் உயரதிகாரிகள் இது குறித்து நேரிடையாக ஆராய கொழும்பு வரவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் சில தினங்களுக்கு முன் தம்மை சந்தித்த சில உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம் உதவி வழங்கும் நாடுகளால் வழங்கப்படும் நிதி தேர்தல்கால சலுகைகளை அமுல் செய்வதற்கு ஒருபோதும் பயன்படுத்தப்படமாட்டாது என திட்டமிடல் அமைச்சின் செயலாளர் டாக்டர் விக்ரமவீரசூரிய உறுதியளித்துள்ளார்.

இதனிடையே ஒத்திவைக்கப்பட்ட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறும் எனவும் இக் கூட்டத்தில் புதிதாக தெரிவு செய்யப்படும் அரசின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர் எனவும் கொழும்பு செய்திகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைக் கூட்டணியின் வழக்கு உயர்நீதி மன்றிலும் தள்ளுபடி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இம்முறை பொதுத்தேர்தலை நடத்துவதை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்தமனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இம்மனு தொடர்பாக நேற்று உயர்நீதிமன்று அளித்த தீர்ப்பில் மனு தள்ளுபடி செய்யப்படுவதாகவும், தள்ளுபடிசெய்யப்பட்டதற்கான காரணத்தை தாம் பின்பு அறிவிப்பதாகவும் குறிப்பிட்டது.

பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி சில்வா, நீதியரசர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரணியினரின் வன்முறையை எதிர்கொள்ள நாம் தயார்

## ஐ. தே. க. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள காலங்களிலும் தேர்தல் முடிவடைந்த பின்னரும் எதிர்க்கட்சிகளால் நடத்த திட்டமிடப்பட்டுள்ள வன்செயல்கள் குறித்த தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக ஐக்கியதேசியக் கட்சிப் பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சகல நிலைகளையும் எதிர்கொள்ளத் தமது கட்சி தயார் நிலையில் உள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். இதற்கான விசேட பாதுகாப்பு ஒழுங்கமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் ''ஞாயிறு லங்கா தீப'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்களில் பலரும் ஆதரவாளர்களில் சிலரும் இவ் வன்முறையாளர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாகவும்இதனால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மிகச்சிறந்த ஆட்டக்காரராக ரேமாரியோ தெரிவு

(வாஷிங்டன்)

உலக கிண்ண உதைபந்தாட்டத்தில் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட பிரேசிலுக்கு ஐந்து கிலோ தங்கத்திலான கால்பந்து உலகக் கோப்பையை அமெரிக்க உதவி ஜனாதிபதி அல் கோர் வழங்கினார்.

உலக கால்பந்தாட்ட தொடரின் நாயகனாகவும் மிகச் சிறந்த ஆட்டக்காரராகவும் ரேமாரியோ உலக கால்பந்தாட்ட கழகத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே இம்முறை நான்காவது முறையாக உலக உதைபந்தாட்ட சாம்பியனாக தெரிவாகியுள்ள பிரேசில் அணி இன்று தாயகம் சென்றடையும் போது அணியை வரவேற்க பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பிரேசிலில் வாணவேடிக்கைகளும் குதூகலமுமாக அந்நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது.

# புலிகள் பற்றிய விவரணம் கொழும்பில் ஒலிபரப்பு

(கொழும்பு)

வட பகுதியில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து அண்மையில் பி. பி. ஸி தொலைக் காட்சி நிலையம் ஒளிப்பதிவு செய்த விவரணத் தொடர்கள் தற்போது கொழும்பிலும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

பி. பி ஸி தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய கொழும்பின் தனியார் ஒளிபரப்பு நிலையமான ஈ. ரி. விக்கு சிறிலங்கா அரசு இதுவரை விதித்திருந்த தடையை இப்போது நீக்கியதையடுத்து தற்போது பி. பி. ஸி தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் இந் நிறுவனம் ஊடாக சிறிலங்காவிலும் ஒளிபரப்பாகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

வைத்தியசாலையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு பெண்பிள்ளை தேவை. தொடர்பு கொள்ளவும்: கைலாசர் மருந்துக்கடை NO -95, பருத்தித்துறை றோட், கல்வியங்காடு (8852)

## முதலிடம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ் - மாவட்ட கூட்டுறவுச் சபையினால் அதன் அங்கத்துவ சங்கங்களின் பணியாளர்களிடையே இம் மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை நடாத்தப்பட்ட 'வினாடி வினா' போட்டியில் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற்ற இப்போட்டியில் பிரஸ்தாப சங்கப் பணியாளரான திரு. காந்தன் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தட்டிக் கொண்டார். (22)

## கலப்படப்பொருள் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சந்தைப் பகுதி கடைகளில் கலப்படம் செய்யப்பட்ட இருபது போத்தல் நல்லெண்ணெய் சாவகச்சேரி பொது சுகாதார பரிசோதகரால் கைப்பற்றப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர் கடந்த வியாழக்கிழமை சந்தைக் கடைகளில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது கலப்பட நல்லெண்ணெய்ப் போத்தல்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (88)

## தென்னம் நாற்று எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

மேலும் 15 ஆயிரம் தென்னம் நாற்றுக்கள் கப்பல் மூலம் தருவிப்பதற்கு யாழ் மாவட்ட கமநல சேவை திணைக்களம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இதற்கு தேவையான உதவிகளை யாழ் அரச அதிபர் கமநல சேவை திணைக்களத்திற்கு வழங்கி வருகிறார். ஏற்கனவே 20 ஆயிரம் தென்னம் நாற்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## டாக்டர் கதிரிப்பிள்ளை கந்தையா

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)

(சந்தை வீதி, காங்கேசன்துறை)

திதி: 19-7-94

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 25-1 1919 | 29-7-1993 |

எமது குடும்பத்தின் விடிவிளக்காய்
இருந்து எமக்கெல்லாம் ஒளி
கொடுத்த எம் அன்புத்தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது.

- குடும்பத்தினர்

கல்லூரி ஒழுங்கை,
கோண்டாவில் (8849)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21. 01. 1923

மறைவு
30. 07. 1993

## அமரர் வேலுப்பிள்ளை கந்தையா

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்)

திதி: 19. 07. 1994

# நினைவு கூருகின்றோம்...

## 19-07-1994...

1986-ம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **சதாசிவம் சண்முகராசா** (சம்மாந்துறை - அம்பாறை)

★ **ஆ. தெய்வேந்திரம்** (சம்மாந்துறை- அம்பாறை)

1987-ம் ஆண்டு வவுனியா - தம்பனையில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய,

**விஜி** (யோசப் சத்தியநாதன் - பாசிமோட்டை, வட்டக்கண்டல் - மன்னார்)

வவுனியா - அடம்பன் குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**மதி** (இராசதுரை ஜெயபாலன் - 4-ம் படிவம், பாவற்குளம் - வவுனியா)

திருமலை - பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சுட்டுக்கொன்று, மரத்தில் தொங்கவிடப்பட்டு எரிக்கப்பட்ட மூன்று வயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

1988-ம்ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**தாடி** (பொன்னம்பலம் நாதன் காரைதீவு- 03 - அம்பாறை)

மட்டு - கிருமிச்சைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். கைலன்** (வடிவேல் சண்முகநாதன் - கிரான் - மட்டு)

1989-ம் ஆண்டு யாழ் - திருநெல்வேலியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்டு மானிப்பாய் வங்கிக்கு முன்பாக சடலமாக மீட்கப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**நாகரத்தினம் விக்கினேஸ்வரன்** (உடுவில் - சுன்னாகம்)

துன்னாலை, கோவிற்கடவைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண். சரவெட்டி, அரசடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இராசகிராமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990-ம் ஆண்டு ஆனையிறவு - குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**டெஸ்மன்** (கணபதிப்பிள்ளை தணிகாசலம்-7-ம் வட்டாரம் மூதூர் - திருமலை)

**லெப். சௌந்தலன்** (சின்னையா நாகராசா- 95, 2-ம் படிவம் - தர்மபுரம்)

**கீர்த்தி** (பசுபதி சிறிதரன்-திருவையாறு-கிளிநொச்சி)

**மேகன்-தம்பி** (சண்முகம் மனோகரன் - குமரபுரம், பரந்தன் - கிளி.)

இதேபகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**லெப் துஷ்யந்தன்** (சிவயோகநாதன் பார்த்தீபன் - தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை)

# ஆங்கிலதின விழா

(கொழும்புத்துறை)

யாழ்/பாஷையூர் சென் அன்ரனிஸ் றோமன் கதலிக் மகாவித்தியாலயத்தின் ஆங்கில தின விழா நாளை முற்பகல் 9-30 மணிக்கு வித்தியாலயத்தின் அதிபர் அருட் சகோதரி மேரி கொஸ்கா தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திரு. திருமதி டி. ஆர். அருமைநாயகம் (ஆங்கிலம் உதவிக் கல்விப் பணிப்பாளர்) பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளார். (24)

# கேள்வி அறிவித்தல்

## ஐ. டி. ஏ. (உலகவங்கி) வேலைகள்

06-07-1994 ஈழநாதம் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் முடிவுத்திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன:

(1) கேள்விப்பத்திரங்கள் வழங்கும் திகதி- 21-07-94 நண்பகல் 12. 00 மணிவரை

(2) கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 27-07-94 மு. ப. 10.00 வரை.

எம். ஏ பிரான்சிஸ்
பாடசாலைக் கட்டிட வேலைகள்
பொறியியலாளர்,
யாழ்ப்பாணம். (சி-9949)

# ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா

## தரும் தோழமையுள்ள செய்தி

உங்களுக்குத் தேவையான மேலைத்தேய, கீழைத்தேய, உணவு வகைகளை உங்கள் நாவின் ரசனைக்கேற்ப சட்டளையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களை நேரில் அறியுங்கள்.

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி.

(சி-9919)

# 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



20 ஆயிரம் தென்னம் நாற்றுக்கள் கமநல சேவை திணைக்களத்தால் தருவிக்கப்பட்டு கமநல சேவை நிலையங்களிலுள்ள நாற்று மேடைகளில் நடப்பட்டுள்ளன. இவை வரும் கார்த்திகை மாத இறுதியில் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (88)

திதி:- 19. 07. 1994

எம்மை எல்லாம் அழ விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உமது நினைவலைகள் நீங்கவில்லை.

மீனாட்சி அம்மன் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(8846)


ஜெயாவின் 2 சேவைகள்

ஒன்று வியாபாரிகட்கு
இரண்டு பாவனையாளர்கட்கு

அழகிற்கு மெருகூட்டும்
அழகு சாதனப் பொருட்களின்
நவீன காட்சியகம்

(ஜெயா அழகுமாடம்)

★ அழகு சாதன அன்பளிப்புப் பொருட்கள்
★ மணக்கூட்டு வகைகள்
★ கிளாஸ்செற், கண்ணாடி உபகரணங்கள்
★ எவர் சில்வர் பொருட்கள்
★ தையல் வேலைகளுக்கான சகல வகைப் பொருட்கள்
★ இமிற்றேசன் பொருட்கள்
★ பிளாஸ்ரிக் வகைகள்

இவைகளை மொத்தமாக பெற்றுக்கொள்ள
V
187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாவனையாளரின் சில்லறைத் தேவைகளுக்கு
V
177 A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மணமகளுக்குரிய அரங்கேற்ற கலை நிகழ்வுகளுக்கான சோடனை வகைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-9923)


- தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை)

பரந்தனில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய,

**குகன்** (சுப்பையா செல்வேஸ்வரன்-கரவெட்டித்திடல் - புளியம்பொக்கணை)

மட்டு - மணற்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**சிவபாரதி** (வேல்முருகு நாகராசா - மகிழவெட்டுவான் - மட்டு)

மட்டு -திருப்பழுகாமம் கோவில் போரதீவு, பெரிய போரதீவு, வெல்லாவெளி, கற்சேனை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு பின்னர் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட 35 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். ரொபின்சன்** (திருமேனிப்பிள்ளை கிருபாகரன் - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

**பாபு** (அந்தோனி நிக்கலஸ் - கோரக்கல்லிமடு, கிரான் - மட்டு)

**2-ம் லெப். விக்ரம்** (அருளானந்தம் சுந்தரராஜா - விசுவமடு - முல்லைத்தீவு)

**நிதி** (சோமநாதன் நித்தியானந்தமூர்த்தி - ஜெயந்தி நகர் - கிளிநொச்சி)

**குணராஜ்** (அமுதலிங்கம் குமார் - தர்மபுரம் - கிளிநொச்சி)

**லெப். ராஜேந்தர்** (பொன்னுத்துரை லோகேஸ்வரன் - அடம்பன் - மன்னார்)

**கப்டன் விஜிதா-விஜி** (சிவாஜினி சின்னப்பு - செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)

**லெப். பசுபதி** (இரத்தினசபாபதிஜெகதீஸ்வரன்-மறவன்புலோ, சாவகச்சேரி - யாழ்)

**2-ம் லெப். சிறிபதி** (சற்குணநேசன்வைகுந்தவேள்-கற்கோவளம் - பருத்தித்துறை)

**அசோக்** (தெய்வேந்திரன் ரவீந்திரன் - தும்பளை கிழக்கு - பருத்தித்துறை - யாழ்)

**சிதம்பரநாதன்-நாதன்** (தம்பு ஆனந்தராசா - கோயிலாக்கண்டி, கைதடி - யாழ்)

**குருபரன்** (இராசையா சந்திரசேகரம் - எழுதுமட்டுவாள், கொடிகாமம் - யாழ்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**தினேஷ்** (வேதநாயகம் திவாகரன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)



**செல்வி தம்பிஐயா இராகினி (ரமணி)**

பிறப்பு: 25-4-75 இறப்பு: 28-7-93

அண்ணன், மனைவி பிள்ளையைத் தேடி கடல் கடந்து வவுனியா தேசம் சென்று பார்த்து வரும் வழியில்,
கிளாலிக் கடல் தனிலே அன்னிய கொடியவன் கடலில் உனை அழித்தானே!
உன் அம்மா கதிகலங்க சகோதர, சகோதரி உற்றார் உறவினர் நண்பர்களை விட்டுவிட்டு இறையடி சேர்ந்தாயே!
உன் அண்ணனும் உன் பிரிவு தாங்க முடியாது தன் உயிரை மாய்த்தாரே!
உன் அன்பு அண்ணன் நால்வாது குழந்தைகளும் கதி கலங்க இறையடி சேர்ந்தாரே!

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

அம்மா, அண்ணாமார்,
அக்கா, உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(சி-9948)

வவுனியா - பேயாடி கூழாங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

யாழ் - அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தந்தை, மகன் ஆகிய 02 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9941]

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
தமிழ் பிரிவு ...

**சிந்தனைக்கு..**

ஒரு கை தட்டி ஓசை எழுவதில்லை.
- தமிழ்ப்பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 19-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தயார்நிலையில் அரசியல்வாதிகள்

சிறிலங்காவில் தேர்தல்கால வன்முறையில் பல நூற்றுக்கணக்கானோர் இதுவரையில் காயமடைந்துள்ளனர். வாகனங்களும் பெருமளவில் சேதமடைந்துள்ளன. இருதரப்பிலுமாக- ஐ.தே.கட்சி, பொதுஜன முன்னணி- சில ஆதரவாளர்கள் கொல்லப்படும் அளவிற்கு நிலைமை விபரீதமாகச் சென்றுள்ளது. இத்தனைக்கும் தேர்தலுக்கு இன்னும் சுமார் ஒரு மாதம் அளவில் உள்ளது,

இதேசமயம் தேர்தல் வன்முறை தொடர்பாக இருதரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வருகின்றனர். ஐ.தே.கட்சி வேட்பாளர்கள், முன்னாள் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்கள் தலைமையில் பொலிசாரின் உதவியுடன் வன்முறைகள் திட்டமிட்டு நடத்தப்படுவதாக எதிர்த்தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர்.

ஐ.தே.கட்சியினரே: தேர்தல் வன்முறைகள் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்படுவதாகவும் அது ஓரிடத்தில் இருந்துநடத்தப்படுவதாகவும் தெரிவித்தனர் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்தவர் சாதாரண நபரல்ல. சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே ஆகும்.

இதேவேளை வன்முறைகள் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் அது மேலும் அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவே தெரிவிக்கின்றன. இவ் அதிகரிப்பானது பெருமளவில் கொலைகளையும், சொத்துடைமை நாசத்தையும் ஏற்படுத்துவது தவிர்க்க முடியாது போகலாம்.

அத்தோடு இவ்வாறான வன்முறை பெரியளவில் ஏற்படப் போவதாக சிறிலங்காவின் பிரதான கட்சிகள் முன் எச்சரிக்கை செய்வதோடு பரஸ்பரம் இருதரப்பினரும், பெரியளவிலதான தேர்தல் வன்முறைக்கு எதிர்த்தரப்பினர் திட்டமிட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியும் வருகின்றனர். இக் குற்றச்சாட்டானது, வானொலி, தொலைக்காட்சியில் இடம்பெறும் பிரசாரத்தின் போது

## அபிவிருத்திதிட்டம் குறித்து விசேட கருத்தரங்கு

வடதமிழீழத்தில் விவசாயம், விலங்கு வேளாண்மை, கடல்வளம், சூழல் பாதுகாப்பு தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கமாக, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால், ஒரு விசேட கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

சென்ற வருடமும் கிளிநொச்சியில் இதே போன்ற கருத்தரங்கு ஒன்றின் மூலம் வட தமிழீழத்தில் விவசாயம், விலங்கு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

இம்முறை நடைபெறவுள்ள கருத்தரங்கின்மூலம் வடதமிழீழத்தில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள் ஆராயப்படவுள்ளதுடன், வரும் கால போகத்திலும் சிறுபோகத்திலும், செய்கைபண்ணப்பட உள்ள பயிர்களையும் அவை எவ்வளவு நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படவுள்ளன என்பதும் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்பட உள்ளது.

அத்துடன் புனரமைக்கப்பட்ட சிறு குளங்கள்பற்றி ஆராயப்படவுள்ளதுடன் 95-ம் ஆண்டில் புனரமைக்கப்பட உள்ள குளங்களின் விபரங்களும் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்படவுள்ளது.

கால்நடை அபிவிருத்தி தொடர்பாகவும் நல் இனங்களை அறிமுகப்படுத்தல், தடுப்பூசிகள் போடுதல், சிகிச்சை வழங்குதல், தீவனம் தொடர்பான இலக்குகள் முன்வைக்கப்பட உள்ளது.

இவ்வாறே கடல்வள அபிவிருத்தி தொடர்பாகவும், கடற்தொழில் செய்யக்கூடிய புதிய திட்டங்களைத் தெரிவு செய்யத் தேவையான உபகரணங்கள், வலைகள் பற்றிய விபரங்கள் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டங்களை ஆரம்பித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு இலக்குகள் முன்வைக்கப்பட உள்ளது. இதன் மூலம் மேற்படி துறைகளில் வேலைவாய்ப்புகள் உட்பட பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை போர்க்காலத்திலேயே முன்னெடுத்துச் செல்ல இக்கருத்தரங்கு பாதை அமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## படைப்பாளிக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்

- வண.பிதா.ஏ.ஜே.வி.சந்திரகாந்தன்

(குருநகர்)

''போராட்ட நிலை, எமது வாழ்வு நிலை, அரசின் பொருளாதார நெருக்க நிலை போன்ற பல்வேறு நிலைப்பாடுகளை உள்வாங்கும் ஓவியங்கள் சித்திரங்களில் வெளிக்கொணர்வதை ஓவியக் கண்காட்சிகளில் நுகர முடிகிறது. அத்தகைய படைப்பாளிக் கலைஞர்களை அவர்களது காலத்திலேயே கௌரவிக்க வேண்டும்''.

யாழ்-பல்கலைக்கழக கிறிஸ்தவ-இஸ்லாமிய நாகரிகத் துறைகளின் தலைவர் அருள் திரு ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 15ம்-திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு திருமறைக் கலாமன்ற பயிலக மாணவர்களின் ஓவியக் கண்காட்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஓவியக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்த யாழ் கல்வி வலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ.சிவானந்தன் பேசுகையில்:

''நுண்கலைத் துறையான ஓவியப் பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களும், உபகரணங்களும் பற்றாக் குறையாக இருப்பது மாணவர்கள் இத்துறையில் பின்னடைவதற்குக் காரணமாகின்றன. ''என்றார். (21)

## அவசரகாலநிலை இன்றேல்

## மலையகத் தமிழர்களுக்கென தனி மாகாணம் வேண்டும்

- பெ. சந்திரசேகரன்

(கொழும்பு)

மலையக மக்களுக்கென தனியானதொரு மாகாணம் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின்தலைவர் பெ. சந்திரசேகரன் கொழும்பிலிருந்து வெளியிடப்படும் சண்டே லீடர் ஆங்கில வாரஇதழுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் விளக்குகையில், மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில்மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். இவற்றில் மலையகத் தமிழர்களை மட்டும் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளை ஒருங்கிணைத்து தனியான மாகாணமாக வரையறுக்கக் கூடிய வகையில் எல்லைகள் மீளமைப்பு செய்யப்பட வேண்டும். அதன் மூலமே நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டு வரும் மலையக மக்களின் அபிலாசைகளுக்கு தீர்வு காணப்பட முடியும். இது எமது முன்னணியின் அடிப்படைக் கோரிக்கையாக உள்ள போதும நாம் இதனை இப்போது வலியுறுத்தவில்லை. எமது இக்கோரிக்கை தொடர்பாக சிங்கள மக்களுக்கு விளக்கிக் கூறி அதன் மூலம் இதற்காக அவர்களின் ஒப்புதலைப் பெற முயல்வோம். எனவும் தெரிவித்தார்.

## யாழ் மாவட்டத்திலும் கூட போட்டியிட விரும்பினோம்

- சிறிலங்கா முற்போக்கு முன்னணி

(கொழும்பு)

யாழ் மாவட்டத்திலும் போட்டியிட விரும்பினோம். ஆனால் அரசு பலாலி விமான தளம் வரையுமே போக்குவரத்து வசதி செய்து தருவதாக கூறியதால் நாம் அத்திட்டத்தைக் கைவிட்டோம் என, ஜே வி பி. ஆதரவுடன் போட்டியிடும் சிறிலங்கா முற்போக்கு முன்னணி தெரிவித்துள்ளது.

மேலும் அம்முன்னணியின் தலைவர் ஆரிய புலேகொட இதுகுறித்து தெரிவிக்கையில், தெல்லிப்பழையில் நியமன பத்திரத்தை தாக்கல் செய்ய பாதுகாப்பு அமைச்சில் போக்குவரத்து வசதி கேட்டோம். பலாலிவிமானத் தளம் வரையுமே போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுமெனக் கூறியபடியால் எமது நியமனப் பத்திரத்தை சமர்ப்பிக்க முடியாமல் போய்விட்டது என ஆரிய புலேகொட தெரிவித்தார்.

## வருடாந்த மஹோற்சவம்

(கொழும்புத்துறை)

அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. (24)

## சித்திரத்தேர் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலுக்கு புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இப் புதிய சித்திரத்தேர் அமைக்கும் பணியில் பிரபல சிற்ப வல்லுனர் ஆ. ஜீவரத்தினம் தலைமையிலான சிற்ப வல்லுனர் குழு ஒன்று ஈடுப

## பொதுத்தேர்தல் தொடர்பில் 362 வன்முறை சம்பவங்கள்

- பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் தொடர்பாக 362 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பணிக்கான பொலிஸ் அலுவலகம் கூறியுள்ளது.

பௌதீக ரீதியிலான தாக்குதல்களாகவும், தூண்டப்பட்ட சம்பவங்களாகவும் இவை இடம்பெற்றுள்ளன. களுத்துறை, இரத்தினபுரி, பொலன்நறுவை மற்றும் லக்கமுன பகுதிகளில்கடுமையான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கல்லெறிக் காயங்களுக்கு உள்ளான ஒருவர் படுகாயமுற்று சிகிச்சைக்காக கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகவும், ஹல்துமுல்ல பகுதியில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

## வட-கிழக்கு இணைப்பு பற்றி மு.காங்கிரசுடன் உடன்பாடு

பொது ஜன முன்னணிமீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் தொடர்ந்து இணைத்து வைத்திருப்பது தொடர்பாக பொதுமக்கள் முன்னணியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே இரகசிய ... தனா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தமது கூற்று பொய்என்றால் அதனைநிரூபிக்கும் வகையில், முஸ்லிம் காங்கிரசும், பொதுமக்கள் முன்னணியும் கையெழுத்திட்ட இரகசிய உடன்படி

ரும், பெரியளவிலான தேர்தல் வன்முறைக்கு எதிர்த் தரப்பினர் திட்டமிட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியும் வருகின்றனர். இக் குற்றச்சாட்டானது, வானொலி, தொலைக்காட்சியில் இடம்பெறும் பிரசாரத்தின் போது தெரிவிக்கப்படும் அளவிற்கு முதன்மை பெற்றதாக மாறிவிட்டது.

தற்பொழுது ஆளும் கட்சியாக இருக்கும் ஐ. தே. கட்சி, தேர்தலில் ஏற்படப் போகும் தோல்வியை உணர்ந்து கொண்டமையால் அதனை குழப்புவதற்குத் தேர்தல் வன்முறையில் பெரியளவில் ஈடுபட திட்டமிட்டு வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணி குற்றம்சாட்டி வருகின்றது.

ஐ.தே.கட்சியோ, தேர்தலில் தமது கட்சி வெற்றி பெறுவதைத் தடுக்கும் முகமாகவும், அதேசமயம் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால்- எதிரணியினர்-ஐ.தே.கட்சியினர் மீது பெரும் தாக்குதலை நடத்தவும் பொதுஜன முன்னணியினர் திட்டமிட்டு வருவதாகவும் குற்றம்சாட்டி வருகின்றது.

ஐ.தே.க. தரப்பினரும், எதிர்த்தரப்பினரும் இவ்வாறு பரஸ்பரம் குற்றம்சாட்டி வரினும், நடக்கும் சம்பவங்கள், கிடைக்கும் தகவல்கள் என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கையில், தேர்தல் வன்முறைகளைத் தூண்டுபவர்களும், தலைமை தாங்குபவர்களும் அரசியல்வாதிகளாகவே உள்ளனர். அவர்களின் வழிகாட்டலிலேயே வன்முறைகள் இடம்பெறுகின்றன.

இந்நிலையில் தேர்தல் வன்முறை பற்றி அரசியல்வாதிகள் விடுத்திருக்கும் எச்சரிக்கையானது வன்முறையில் இறங்கத் தாம் தயாராகிவிட்டோம் என்பதைக் குறிக்கும் அறிவிப்பே ஆகும். இது இலங்கையின் இன்றைய நிகழ்காலச் சம்பவம் மட்டுமல்ல, கடந்த காலத்திலும் அரசியல்வாதிகளே தேர்தல் வன்முறையையும், இனக்கலவரங்களையும் திட்டமிட்டு நடத்தினர் என்பதே வரலாறாகும்.

இந்நிலையில் தேர்தல் வன்முறை குறித்து அச்சமடைய வேண்டியவர்கள் மக்களே ஒழிய அரசியல்வாதிகள் அல்ல. சிங்கள மக்களுக்கு இனவாதத்தை ஊட்டி தமிழ் மக்களுக்கு எதிராக எவ்வாறு இனக்கலவரங்களை நன்கு திட்டமிட்டு நடத்தினார்களோ அதே போன்று ஏதோ ஒரு உணர்ச்சிகரமான விடயத்தைக் கண்டுபிடித்து அல்லது உருவாக்கி வாக்காளரை மோதவிட்டு அதில் அரசியல்வாதிகள் குளிர்காய்ந்து விடுவார்கள்.

ஆனால், இவ்விடயத்தில் தனியாக சிங்கள மக்கள் மட்டும் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதல்ல. காலம் காலமாக சிங்களவருக்கிடையிலான முரண்பாடுகளைத் திசை திருப்ப இனக்கலவரங்களையே சிங்கள அரசியல்வாதிகள் கையாண்டு வருகின்றனர். தற்பொழுது அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள/ ஆரம்பிக்கப்படவுள்ள தேர்தல் வன்முறைகள் கட்டுக்கடங்காது போனால்இறுதியில் தமிழர் மீதே அதனைத்திசை திருப்பிவிடுவார்கள் என்பது பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே. இதனை தெற்கிலுள்ள தமிழர்கள் அசட்டை செய்வார்களேயானால், இறுதியில் சிலவேளை வருந்தவேண்டி வரலாம்.

## அவசரகாலநிலை இன்றேல் பிணையில் விடுவிக்கவும்

### குமார் பொன்னம்பலம் கோரிக்கை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதால், கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டதாகக்கூறப்படும் சந்தேக நபர்களை பிணையில் விடுமாறு, சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான குமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

அவர் தனது வாதத்தில், இவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது அதன்படி 18 மாதங்கள் மட்டுமே தடுத்து வைக்க முடியும். இந்த நபர்களோ 30 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 18மாதங்களுக்கு மேற்பட்டது என்பதால் பிணை மனுவை நிராகரிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## அடையாள அட்டைக்குபதில் குடியுரிமை அட்டை

### -எல்.கே.அத்வானி யோசனை

(டில்லி)

நாட்டில் நேர்மையான முறையிலும், நியாயமான விதத்திலும் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகளுக்கு பதிலாக குடியுரிமை அட்டைகள் வழங்கப்படலாம் என்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார்.

பொதுக் கூட்டத்திலே பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்த நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளையும், இந்தியப் பிரஜைகளையும் அடையாளம் கண்டு கொள்வதற்கான பல நோக்கு அட்டைகளாகவும் இவை பயன்படலாம் எனவும் குறிப்பிட்டார்.

## திருமதி ஹிலாரி கிளிண்டன் விரைவில் இந்தியா விஜயம்

(சென்னை)

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் பாரியார் திருமதி ஹிலாரி கிளிண்டன் உட்பட அமெரிக்க அரசின் சிரேட்ட அதிகாரிகள்பலர் அடுத்த சில மாதங்களில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இத்தகவலை அமெரிக்க வர்த்தகத்துறை துணை அமைச்சர் பில் காரிட் வெளியிட்டார். சென்னையில் அமெரிக்க-இந்திய வர்த்தக சங்கத்தின் வெள்ளிவிழாவில் பேசிய அவர் மேலும் கூறுகையில் அமெரிக்க-இந்திய பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இவ்விஜயம் அமையும் எனவும், திருமதி கிளிண்டனின் வருகை குறித்து திகதி நிர்ணயிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் உலகநாடுகள் எதையும்விட அதிகளவில் இந்தியாவிற்குத்தான் அமெரிக்க அரசு அமைச்சர்களையும், சிரேட்ட அதிகாரிகளையும் அனுப்பியிருப்பதாகவும், இந்தியாவுடனான வர்த்தக உறவில் அமெரிக்கா அதிகஆர்வம் காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

[illegible] னம் தலைமையிலான சிறப்பு வல்லுனர் குழு ஒன்று ஈடுபட்டு வருகின்றது. (88)

## ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு- நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்ககிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான யூலை மாதக்கொடுப்பனவுதற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுவதாக அதன் முகாமையாளர் திரு. ஆ. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (22)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குள அணைக்கட்டில் இளைஞர்ஒருவரின் சடலம் கடந்த வெள்ளி இரவு கண்டுபிடிக்கப்பட்டது. துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இச்சடலம் பாலமோட்டையைச் சேர்ந்த நடராசா ஞானதாஸ் என்பவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 10,000 ரூபா அபராதம் விதிப்பு

(கொழும்பு)

தேர்த்திருப்பணிக்காக, கொழும்பு வந்திருந்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவர் ஆயுதப்பயிற்சி பெற்றவர் என பொலிசாரால் கைது செய்யப்பட்டு, பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த இச்சிற்பக்கலைஞர் கடந்த மாதம் 27-ந் திகதி கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார். இவருடன் இவரது சகோதரர் உட்பட 8 சிற்பக் கலைஞர்கள் கைதானார்கள் ஆயினும், ஆட்கொணர்வு மனுவின் பிரகாரம் மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டும், இவர் மேல் மட்டுமே வழக்குத் தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

[illegible] சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே இரகசிய உடன்பாடு காணப்பட்டிருப்பதாகமக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர் தினேஷ் குணவர் [illegible] முன்னணியும் கைச்சாத்திட்ட இரகசிய உடன்படிக்கையை பகிரங்கமாக்குவார்களா எனவும் சவால்விடுத்தார்.

## யாழ்ப்பாணத்தில் தேர்தல் நவசமசமாஜ ஆட்சேபம்

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையை நவசமசமாஜக்கட்சி ஆட்சேபித்துள்ளது.

இது தொடர்பாக நவசமசமாஜக் கட்சியின் சார்பில் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிக்கையில்,

சாவுகளும், அழிவுகளும் அங்கு தொடர்கின்றன பொருளாதாரத்தடையும் உள்ளது. எனவே நாம் அங்கு தேர்தல் நடாத்தப்படுவதை எதிர்க்கிறோம்.

கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்ட பகுதி என்று கொள்ளப்படுகின்ற தீவுப்பகுதிகளை உள்ளடக்கிய சிறு நிலப்பரப்பில் வாக்குச் சாவடிகளை கொத்தணி முறைக்குள் கொண்டு வந்து தேர்தல் நடத்துவதை கண்டிக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

## முதலாவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளை புதன்கிழமை இரவு பூங்கா நிர்வாகி திரு மு. .நடேசரெத்தினம் தலைமையில் நடைபெறும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், பூங்கா நிர்வாகத்தினர் ஆகியோரின் சிறப்புரைகளுடன் பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (22)

## நாட்டுக்கூத்து

(குருநகர்)

யாழ். சென்: றோக்ஸ் சனசமூக நிலைய வான்மதி கலாலயம் தயாரித்து வழங்கும் ''ஜெனேவா'' (மரபு வழிக்கூத்து) 21 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சென்: றோகஸ் விளையாட்டரங்கில் மேடையேறும்.

மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. ஹில்லறி ஜெயநேசன் அடிகள், தமிழீழ கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. ப. தமிழ்மாறன், யாழ். பிரதேச செயலர் திரு. க. குணராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர். (21)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-07-19 செவ்வாய் இரவு

08. 01- ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10- அறிந்து கொள்ளுங்கள்- தகவல் களஞ்சியம்
08. 20- நலந்தானா- பெண்களின் மாதவிடாய், கருப்பை சம்பந்தமான நோய்களும் ஆலோசனைகளும்
08. 30- செய்திகள்
08. 40- கருத்துக்களம்- ''வெளிப்பூ''
08. 50- களமும் காளமும் ''ஏக்கம்''

### 1994-07-20 புதன் காலை

07.02- மாவீரவணக்கம்
07. 15- நீங்கள்கேட்டவை
07. 30- செய்திகள்
07 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# மணலாற்றுப் பகுதியில் 2600 சிங்கள வாக்காளர்கள்

(கொழும்பு)

மணலாறு பகுதியை உள்ளடக்கிய மகாவலி குடியேற்றத் திட்டத்தின் எல்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள சுமார் 2600 சிங்கள வாக்காளர்கள் இம் முறை முதல் தடவையாக தேர்தலில் வாக்களிக்க விருப் தாகக் கூறப்படுகின்றது

1984 ஆகஸ்ட் 16-ல் இவர்கள் குடியேற்றப்பட்ட போதும் 1988, 1989-ம் ஆண்டுகளில் நடந்த தேர்தல்களின்போது இவர்களுக்கான வாக்களிப்பு நிலையம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கற்குளம் பகுதியிலேயே அமைக்கப்பட்டிருந்தது. எனினும் இம் முறை இவர்களுக்கான வாக்களிப்பு நிலையம வவுனியா மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. பதவியா, பராக்கிரமபுர பதவிசிறிபுர பகுதிகளை உள்ளடக்கி கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குக்குல்வெவ என்பவற்றையும் இணைத்துள்ளதே மகாவலி எல் வலயம் என்பது தெரிந்ததே.

## எமது அலுவலகத்திற்கே வாக்கு கேட்க வந்தார்

### ஆனந்தசங்கரி மீது புளொட் குற்றச்சாட்டு

(வவுனியா)

எமது அலுவலகம் என நன்கு தெரிந்திருந்தும் எம்மிடம் வாக்குகளை கேட்பதற்காக வந்த கூட்டணிப் பிரமுகரான ஆனந்தசங்கரியே வலிந்து தகராற்றை உருவாக்கினார் என வவுனியாவில் செயற்பட்டு வரும் புளொட் குழு தெரிவித்துள்ளது.

அலுவலகத்துக்கு வந்திருந்த அவரிடம் நாம் கேள்விகளை கேட்டோம். எமது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத நிலையிலேயே காரசாரமான வாக்குவாதத்தின் பின் அவ்விடத்தை விட்டு ஆனந்தசங்கரி சென்றார்.

இவ்விதம் சம்பவம் நடக்க அனுதாபத்தைப் பெற, வீணான வதந்திகளை பத்திரிகைகள் மூலம் அவர் உருவாக்கியுள்ளதாக புளொட் குழு அறிவித்துள்ளது,


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

அறிவித்தல்

**கலந்துரையாடல் 20-07-94**

வலிகாமம் கோட்ட அரசியற் பிரிவினரால் சுன்னாகம் பல நோ. கூ சங்க கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபைப் பிரதிநிதிகள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு 20-07-94-ந் திகதி புதன் கிழமை பிறபகல் 3.00 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல் நடாத்தப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேற்படி சங்க கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபைப் பிரதிநிதிகள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர். செயலாளர்.

18-07-94 (சி-9953)



பல்கலைக் கழக மாணவர்களுக்கான

**அவசர பொதுக் கூட்டம்**

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசர பொதுக் கூட்டம் இன்று (19-7-94) காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

சில அவசர தீர்மானம் பற்றி கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால் அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாது சமுகம் தருப்படி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக் கழக


## யாழ். தேர்தல் டாப்பு சிங்களத்தில்

யாழ். மாவட்ட வாக்காளர் பட்டியலில் முழுவதும் தமிழில் இடம்பெறவில்லை. சிறு பகுதி சிங்களத்திலும், மிகுதி தமிழிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## கரையோரப

னர்.

அநேகமான பீரங்கிக் குண்டுகள வீதியில் விழுந்து வெடித்தன.

மற்றும் நேற்று காலை 5-00 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று வடமராட்சிப் பகுதிகளை இரு தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது. அடுத்து 8-00 மணியளவில் அப்பகுதியை உலங்குவானூர்தி ஒன்றும் நோட்டமிட்டது. (யோ)

## வடமராட்சி

மீண்டும் மேற்குறித்த நேரம் அப் பகுதிக்கு வந்து தாக்கியது.

இத் தாக்குதல் சம்பவத்தின்போது அக் கடல் பகுதியில் மீனவர்கள் தொழில் செய்து கொண்டிருந்தனர்.

## கூட்டம்

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு தொடர்பாக தெல்லிப்பழை/சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று நாளைபுதன்பி.ப 2 00 மணிக்குமானிப்பாய்இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

வடமராட்சிக் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கிடையிலான மாதாந்த கலந்துரையாடல் இன்று பி.ப 3.00 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம் பெறும். எனவே வடமராட்சிக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து உற்பத்திக் குழு உறுப்பினர்களையும் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

## கடல்ரோந்து அதிகரிப்பு

சுழிபுரம், மாதகல், காரைநகர் கடற்பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்து காணப்படுகின்றன.

இந்த ரோந்துப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதனால் கடலில் தொழிலில் ஈடுபட்டுவந்த மீனவர்கள் தொழிலிற்குச் செல்வதில் தயக்கம்காட்டி வருகின்றனர். அத்தோடு கரையோரப் பகுதிகளில் விமான நடமாட்டமும் அதிகரித்துள்ளது. அதிகாலை வேளைகளிலும், மாலை வேளைகளிலும் இந்த விமானங்கள் மேற்குறித்த பகுதிகளின் வான்பரப்பில் சுற்றி நடமாடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது (41)

## ஆயுத

தடுக்க சிறிலங்கா கடற்படையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருப்பதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தீவுப்பகுதியிலிருந்து அனைத்து ஆயுதம் தாங்கியவர்களையும் அப்புறப்படுத்திய பின்பே யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்த முடியும் எனவும் எனவே அதுவரை யாழ். மாவட்ட தேர்தலை ஒத்திவைக்கும்படி தாம் தேர்தல் ஆணையாளரை கோரப் போவதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

# நல்லூரில் நாளை கம்பன் விழா ஆரம்பம்

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ''கம்பன் விழா'' நிகழ்வுகள் நாளை புதன் கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை ஐந்து தினங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள விழாப் பந்தலில், நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் நாளை 4 30 மணிக்கு ஊர்வலம், மங்கள இசை, மூதறிஞர் கௌரவிப்பு, மகரயாழ் விருதுவழங்கல், பரிசளிப்பு, நூல்வெளியீடு, ஆடல்வேள்வி என்பன நடைபெறவுள்ளன.

# கால்பந்து உலக கிண்ணம் பிரேசில் அணி பெற்றது

(வாசிங்டன்)

லொஸ் ஏஞ்சல்சில் நேற்று அதிகாலையில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில்' பிரேசில் அணி, இத்தாலி அணியை 3 - 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் இறுதியாட்டத்தில் இறுதிவரை இரு அணிகளுமே கோல்கள் எதையும் போடமுடியாத நிலையில் 'டைபிரேக்கர்' எனப்படும் பெனால்ட்டி உதைகள் வழங்கப்பட்டன. முதல் நான்கு பெனால்ட்டி உதைகளின் போது இத்தாலி அணி இரு முறை சந்தர்ப்பங்களை தவறவிட்டது ஆனால் பிரேசில் அணியோ ஒரு முறை மட்டுமே வாய்ப்பை நழுவவிட்டது. முன்னதாக பந்தயம் முடிவுற்றபோதும், மேலதிக நேரம் வழங்கப்பட்ட போதும் இரு அணிகளுமே கோல்கள் எதையும்போட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெனால்ட்டி சூட் அவுட்டுகள் மூலம் உலக கால்பந்து கோப்பைக்கான முடிவு நிர்ணயிக்கப்பட்டிருப்பது இதுவேமுதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## வால்வெள்ளி

என்று தெரிவித்தனர். முதலாவதும் மிகச்சிறியதுமான வால்வெள்ளித்துண்டு சனிக்கிழமை இரவு வியாழக்கிரகத்துடன் மோதியது. இந்தக் காட்சியை தெளிவாகப்பார்ப்பதற்கென தென்னாபிரிக்க நகரமான நெதர்லாந்தில் நூற்றுக் கணக்கான விண்வெளி விஞ்ஞானிகளும் வானியல் நிபுணர்களும் தங்கியிருந்தனர். தென்னாபிரிக்க வானியல் அவதான நிலையத்தைச் சேர்ந்த டேக்டானி தகவல் தருகையில் இந்த வெடிப்புத் தாக்கத்தை 20 நிமிடங்கள் கழிந்தபின்பே பார்க்க முடியும் என்று தெரிவித்தார். தீப்பிழப்பை 20 நிமிடங்கள் கழித்து தாங்கள் பார்க்க விரும்பவில்லை என்றும் உடனடியாக அதனைப்பார்க்க விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தடுத்து

களில இருப்பதாக தெரியப் படுத்தியுள்ள சுமார் இருநூறு பேர் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டு இருப்பதாக

## விடுதலைக்

கள் கே. எம். எம். பி குலதுங்க பி. இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் வாதங்கள் வைக்கப்பட்டன.

அரசியலமைப்பின் கீழுள்ள இவ் அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தேர்தல் ஆணையாளர், அரசாங்க அதிபர், சட்டமாஅதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக காட்டப்பட்டனர்.

யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதைக் கண்டித்து அதை நிறுத்தக் கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி சில தினங்களுக்கு முன்னும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## புலிகள்

வடபகுதி தொடர்பாக அண்மையில் பி பி ஸி ஒளிப்பதிவு செய்த நிகழ்வுகள் ஈ ரி. வி. நிறுவன தொலைக்காட்சி சேவை யூடாக தற்போது ஒளிபரப்பப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தின் மீது போடப்பட்ட பொருளாதாரத்தடை, இத்தடையை விடுதலைப் புலிகள் உடைக்க எடுக்கும் நடவடிக்கைகள், சீதன முறையை ஒழிக்க புலிகளின் பிரசார நடவடிக்கைகள், விறகு தேவையை பூர்த்தி செய்ய பெருமளவிலான மரநாற்று மேடைகளை அமைத்து வருதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பாக பி. பி ஸியின் செய்தி விவரணத் தொடர் ஒன்று ஈ. ரி. வி மூலம் சிறிலங்கா விலும் ஒளி பரப்பப்பட்டது.

## இந்தியாவில் 330 பேர் வெள்ளத்தினால் பலி

இந்தியாவின் தெற்கு, கிழக்கு, தென்கிழக்கு மாநிலங்களில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் மண்சரிவினாலும் குறைந்தது 330 பேர் பலியாகியதாகதெரிவிக்கப்படுகிறது.

பூட்டானில் 20 ஆயிரம்பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவில் 17 நகரங்கள் பகுதியாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

## பொ. ஐ.மு

தில்லை எனவும் நாட்டின் சகல பகுதிகளும் ஒரே மாதிரியே கருதப்படும் எனவும் இதில் எதுவித வேறுபாடுகளும் இருக்கமாட்டாது எனவும் குறிப்பிட்ட அவர் சிறிலங்கா ஒரு தேசிய நாடாக இருக்க வேண்டும் என்றார்.

''நாட்டின் இளைஞர்களை யுத்தம் புரிவதற்கென வடக்கே அனுப்பும் அரசாங்கம் அங்குஇளைஞர்களைகொலைக்கு அனுப்பி விட்டு கோடிக் கணக்கில் கமிஷன் பெற்றுக் கொள்கிறது.''

இவ்வாறு மக்களின் பணத்தைக் கமிஷனாகப் பெற்றவர்கள் பகிரங்க தண்டனையை அனுபவிக்கவேண்டும். இதனை வெளிக்கொணருவதற்காக ஜனாதிபதிக் கமிஷன் ஒன்று அமைக்கப்படவுள்ளது இதற்காக எமது அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதி உட்பட எவருமே வவுனியாவிற்கு அப்பால் செல்லமுடியாது. அவ்வாறு செல்வதாயின் பிரபாகரனிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. இவ்வாறு பிரபாகரனுக்கு தனி அரசு ஒன்றை கொடுத்தது இந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தான் அத்துடன் எமது இளைஞர்களைக் கொல்வதற்கென்றே அரசு பிரபாகரனுக்கு பணம், ஆயுதங்கள் உட்பட பல்வேறு பொருட்களையும் வழங்கியது. இரண்டாயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் வேலையற்றவர்களுக்கும் மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா இலவசமாக வழங்கப்படும் இப்பணம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் வரை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக
மாணவர் ஒன்றியம்
U. S. U-

(சி-9952)

## முக்கிய அறிவித்தல்

### சுன்னாகம் வணிகர் கழகம்
### விசேட கலந்துரையாடல்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட வணிகர் கழகத்திற்கான விசேட கலந்துரையாடல் இன்று 19-07-94 மாலை 3 மணியளவில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் இடம்பெறும். அனைத்து வர்த்தகர்களும் கலந்து கொள்ளவேண்டி இருப்பதால் வர்த்தக நிலையங்களையும் பூட்டி இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வணிகர் கழகம்,
சுன்னாகம்.

(சி/9951)

செய்து கொண்டிருந்தனர். இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் அறியப்படவில்லை.

(யோ)


யாழ். ஸ்ரீதரில்

தினசரி 4.00 மணி

**உயிராயுதம்**

தினசரி 6.00 மணி
சனி, ஞாயிறு 10.30,
6.00 மணி

JURASSIC PARK

(சி-9786)


போவதாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

### சிறிலங்கா

தெரிவிக்கின்றன.

இவ்வேளையில் ஜனாதிபதி அறிவித்த சில சலுகைகளை உடனடியாக அமுல்செய்ய முடியாத நிலை உள்ளது என்றும் இது அமுலாக காலதாமதமாகலாம் என்றும் நிதித்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

### திருமலை

படையினர் மீதான தாக்குதலை நடத்த மேலும் சில விடுதலைப் புலிகள் வந்ததை அடுத்து படையினர் ஹெலிகப்டரின் உதவியை நாடியதாகவும் தெரிவித்தன.

இம்மோதலின்போது இராணுவ அதிகாரி ஒருவர் பலியானார். சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

பேர் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட இருப்பதாக மேலும் தெரிய வருகின்றது.

### ஈ. பி. டி பி

தெரிவிக்கப்பட்டது.

தீவுப் பகுதிக்கு செல்லும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் தெரிவித்தார்.

எனினும், ஈ. பி. டி. பி. இனரின் ஆயுதங்கள் தீவுப் பகுதியில் களையப்பட வேண்டும என்ற ஈ. பி. ஆர். எல். எவ். இனரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இதேவேளை தீவுப் பகுதிக்கு மீண்டும் ஒரு குழுவை அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே தேர்தல் நீதியாக நடைபெறுமா என்பதை தீர்மானிக்கவிருப்பதாக ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

### பாலரட்ணம் பரமேஸ்வரி

40, சாஸ்திரியார் வீதி, அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட பாலரட்ணம் பரமேஸ்வரி 18-7-94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பாலரட்ணத்தின் அன்பு மனைவியும், இந்திராதேவி, ராஜமோகன் (ஈழநாதம்), சுபாசினிதேவி, சந்திரமோகன், மஞ்சுளாதேவி, ஜெயமோகன், இந்திரமோகன், உமாச்சந்திரன் (மாவீரன்), கிருஷ்ணமோகன் ஆகியோரின் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
மோகன்
(மகன்)

40, சாஸ்திரியார் வீதி,
அரியாலை.

(இ)


**மிக விரைவில்**

தமிழோசை, இது எங்கள் தேசம், தாயகக் கனவு, சின்ன விழிகள் போன்ற வெற்றிப் படைப்புகளைத் தந்த

பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

# இன்னும் ஒரு நாடு

(சி/9937)

தயாரிப்பு: முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது